1971 டிசம்பர் 17]

திரு. எம். சுரேந்திரன் : சார், சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்றாலும், அதைத் தளர்த்தப் படவேண்டிய அவசியம் பற்றிச் சொன்னார்கள். அதே போன்று, தமிழ் நாட்டில் பேருந்துகளை தயாரிக்கும் போதும், கோடைகாலத்திற்கு மட்டுமின்றி, மழை காலத்திற்கும் ஏற்றவை களாகச் செய்ய அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஜீப் பேருந்து பணி

* 539 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மலைப்பகுதிகளுக்கு போக்குவரத்து ஏற்பட தனியார் துறையிலோ அல்லது பொதுத்துறையிலோ " ஜீப் பஸ் சர்விஸ் " விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களுக்கும், மலைப் பகுதிகளுக்கும் சாதாரண வழித்தடங்கள் இல்லாத காரணத்தால், ஜீப் பஸ் சர்வீஸ் என்கிற சிறிய பஸ்களை விட ஏற்பாடு செய்தால், கிராம மக்களுக்கும், மலைவாசிகளுக்கும் வசதியாக இருக்கும். அந்த வகையில் அரசு அமுல் படுத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் அத்தகைய ஜீப் பஸ்கள் விட அனுமதி வழங்கப்பட்டது. அதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், போதிய ஜீப்கள் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் வருவாயும் கிடைக்காததால், அவ்வளவாக இன்றையதினம் உரிமையாளர் களால் மேற்கொள்ளப்படாத சூழ்நிலை இருக்கிறது.

பழைய பேருந்துகளுக்கு பதில் புது பேருந்துகள்

* 540 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வழித்தட எண். 80, 131, 101 ஆகியவற்றில் ஓடும் மிகப் பழைய வண்டி களை மாற்றி புது வண்டிகள் ஓட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்து வழித்தட எண்கள் 80, 101, 131 ஆகியவற்றில் ஓடும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் பழைய வண்டிகள் அல்ல. அரசு வரையறுத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளை ஒட்டி 1973 மே திங்கள் முதல் 1975 ஏப்ரல் வரை உள்ள கால அளவில்தான் இவை மாற்றப்படவேண்டியவையாகும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த வழித்தடங்களில் பழைய வண்டிகள் இல்லை என்றாலும், அடிக்கடி வண்டிகள் நின்று போய் விடுவதால், நெசவாளர்கள், விவசாயிகள் முதலியவர்களுக்கு பயன்படாமல், அதிகமாகத் தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக இந்த 131-வது வழித்தடத்தில் அடிக்கடி வண்டிகள் நின்றுபோகும் சூழ்நிலை இருக்கிறது. அதை அதிகாரி களுக்கும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆகவே, தயவுகூர்ந்து, அடிப்படையில் புதியதாக மாற்ற வழிவகைகளை மேற்கொள்வார்களா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வண்டிகள் பழையன அல்ல. பராமரிக்க வேண்டியதுதான் முக்கியம். உறுப்பினர்கள் ஒரு தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் பராமரிக்க, நல்ல முறையில் ஊழியர்கள் ஒத்துழைத்தால் இப்படிப் பட்ட சிக்கல்கள் வர அவசியம் ஏற் படாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், எந்த அடிப்படையில் பழைய பஸ்கள் புதுப்பிக்கப்படுகின்றன. இந்த வருஷ மாடல் என்று 5, 6 ஆண்டுக்கு மேற் பட்டது என்றால் அல்லது இத்தனை மைல் மோட்டார் ஓடியிருக்கிறது என்ற அளவிலா என்பதை தெரிவிக்க முடியுமா? பஸ்களை ரீப்ளேஸ் செய்வதற்கான கோட்பாடுகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம், கோட் பாடுகள் அரசாங்கத்திற்கு இருக்கின்றன. 'லே லண்ட்' வண்டியைப் பொறுத்தவரையில், ஆறு ஆண்டு ஓடியிருக்க வேண்டும், அல்லது 2½ லட்சம் மைல்கள் ஓடியிருக்கவேண்டும். 'பென்ஸ்' வண்டிகளைப் பொறுத்து, 6 ஆண்டுகள் அல்லது 2¼ லட்சம் மைல்கள் ஓடியிருக்கவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பழைய எஞ்ஜின்களை பழுது பார்க்க தனியார் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படுகிறதே. அதையெல்லாம் அரசாங்க ஒர்க்ஷாப்பிலேயே செய்யக் கூடாதா? லாபம் வராதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நமக்கு ஒர்க்ஷாப் இல்லாத இடத் தில், வேண்டிய திறன் சக்தி அந்த ஒர்க்ஷாப்பில் இல்லை என்று எங்கு கருது கிறோமோ அத்தகைய இடத்தில், தனியாருக்குக் கொடுக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு வண்டி ஓடவில்லை யென்றால், 500 ரூ. நஷ்டம் ஆகிறது. ஒரு வாரம் என்றால், கிட்டத்தட்ட ரூ. 3,500 வரையில் நஷ்டமாகிறது. இதைப் பார்ப் பதா, உடனடியாக ரிபேர் செய்து ஓட்டுவதா என்பதுதான் முக்கிய பிரச்சினை.

மருதமலையில் முருகன் கோயில் அருகே சுற்றுலா மண்டபம்

541 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மருதமலையில் உள்ள முருகன் கோயிலை ஒட்டி மக்கள் தங்கு வதற்கு சுற்றுலா மண்டபங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரி சிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசு பரிசிலனையில் இல்லை.